தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

நேரம்: 120 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து; கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழ் மொழியிலுள்ள முதல் எழுத்துகள்

   ______________________

   (18, 12, 30)

2. தமிழர்களின் தாயகங்களில் ஒன்று ______________________.

   (இலண்டன், தமிழீழம், ஐரோப்பா)

3. நண்பருக்கு வந்த ______________ நீக்குவது உண்மை நட்பாகும்.

   (துன்பத்தை, ஆசையை, அறிவை)

4. திருகோணமலையில் அமைந்துள்ள ஈச்சுரங்களில் ஒன்று

   ______________________.

   (நகுலேச்சுரம், கோணேச்சுரம், கேதீச்சுரம்)

5. முக்கனிகளும் முழுப் பயன் தருகின்ற காலம் ______________________.

   (ஆடி, தை, வைகாசி)

6. தோலினால் ஆக்கப்பட்ட இசைக்கருவிகளில் ஒன்று

   ______________________.

   (முரசு, வீணை, குழல்)

7. நொடி:- 'ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம்' ______________________

   (புறங்கை, உள்ளங்கை, விரல்கள்)

8. **குறள் :** மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

____________________ போற்றி உணின்.

(அற்றது, மற்றது, கற்றது)

9. இலங்கையை எல்லாளன் ________________ ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

(34, 24, 44)

10. தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்று

________________

(கிளித்தட்டு, பந்தடித்தல், துடுப்பாட்டம்)

11. காற்றில் ____________ இலைகளைப் பார்க்க அழகாக இருக்கும்.

(பெய்கிற, நனைகிற, அசைகிற)

12. சிறுமி ________________ எனச் சிரித்தாள். .

(கலகல, கலீர்கலீர், கடகட)

13. **பழமொழி :** அன்னம் இட்ட வீட்டில் ________________ இடாதே. (கன்னம், சின்னம், வண்ணம்)

14. ஆலமரத்தின் ________________ பல்துலக்க உதவும்.

(வேர், விழுது, இலை)

15. வீணைக்கொடியோன் எனப் போற்றப்பட்ட மன்னன்

______________________.

(இராவணன், சங்கிலியன், எல்லாளன்)

16. உணவைப் பழுதடையாமல் பாதுகாக்கும் சரக்குகளில் ஒன்று

______________________.

(இஞ்சி, மஞ்சள், மிளகு)

17. எங்களின் எதிர்காலம் ______________ தங்கியுள்ளது.

(கல்வியில், பணத்தில், விளையாட்டில்)

18. நீரை ______________ வகையாகப் பிரிப்பர்.

(மூன்று, நான்கு, இரண்டு)

19. ம் + எ எனும் எழுத்துகளைச் சேர்த்தால் வரும் எழுத்து

______________________.

(மே, மெ, மு)

20. தங்கை தனது வீட்டுப் பாடத்தை ______________

எனச் செய்து முடித்தாள்.

(பளபள, சலசல, மளமள)

21. பழம் + சாறு என்பதைச் சேர்த்து எழுதினால் வருவது

______________________________.

(பழஞ்சாறு, பழம்சாறு, பழச்சாறு)

22. ______________________________ நீரிலும் நிலத்திலும் வாழும்.

(மீன், புழு, ஆமை)

23. அகத்தியம் என்ற சொல் குறிப்பது ______________________________.

(இன்றியமையாதது, தேவையற்றது, பயனற்றது)

24. அறிஞருடன் சேர்ந்தால் ______________________________ப் பெறலாம்.

(பணத்தை, பொருளை, அறிவை)

25. ஒளி என்றால் வெளிச்சம். ஒலி என்றால் ______________________________.

(சத்தம், பகல், மறைவு)

26. முயல் சிங்கத்தை ______________________________ வென்றது.

(அறிவால், பயத்தால், வீரத்தால்)

27. முக்கனிகளுள் ஒன்று ______________________________.

(பலா, புளி, கொய்யா)

28. நாம் நமது உடலுக்கேற்ற உணவை ______________________.

உண்ண வேண்டும்.

(அறியாமல், அறிந்து, அளவின்றி)

29. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருப்பது

______________________.

(காகம், கொக்கு, ஆந்தை)

30. நீங்கள் யாருடைய மனமும் வருந்தும்படி ______________________

(பேசுகிறீர்கள், பேசாதே, பேசாதீர்கள்)

(புள்ளிகள் 30)

**2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| கூட்டங்கூட்டமாக | விறுவிறு | இரவுபகல் |
| சின்னஞ்சிறிய | வீரதீர | |

1. கண்ணன் ________________________ ஓய்வின்றிப் படித்தான்.

2. தேன்மொழி வீட்டிற்கு ______________ என்று நடந்து சென்றாள்.

3. கூட்டில் இருந்து _____________________ பறவைக் குஞ்சு கீழே விழுந்தது.

4. பண்டைக்கால மக்கள் ________________________________ விளையாட்டுகளை விளையாடினர்.

5. மாவீரர் நாளன்று மக்கள் ________________________ வந்தனர்.

(புள்ளிகள் 05)

## 3) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.

1. ஏறு / அம்பலம் / கொண்டு / தன்பலம்

_______________________________________________

_______________________________________________.

2. பொறுத்துக் / வேண்டும் / நண்பரிடம் / குறைகண்டால் / கொள்ள

_______________________________________________

_______________________________________________.

3. வேண்டும் / தெய்வமெனப் / போற்றுதல் / பெற்றோரைத்

_______________________________________________

_______________________________________________.

4. காய்ச்சிக் / குடிப்போம் / ஆடிக்கூழ் / கூடியிருந்து

_______________________________________________

_______________________________________________.

5. பறை / உடையது / தொன்மையும் / சிறப்பும்

_______________________________________________

_______________________________________________.

(புள்ளிகள் 05)

## 4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதிச்; சொல்லியங்களை நிறைவு செய்க.

1. அரசன் அன்று புலவருக்குப் பொன்னைக்

   ______________________.

2. ஒருவன் தன்மீது தானே அன்புகொள்ள

   ______________________.

3. தமிழரசியால் நேற்றுப் பாட்டுப்

   ______________________.

4. நான் தாயகத்திற்குச் சென்றபோது இடிந்த வீடுகளைக்

   ______________________.

5. எங்கள் தாயகத்தை என்றும் நாங்கள் மறக்கக்

   ______________________.

(புள்ளிகள் 10)

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பூவில் | கசாயம் | கிருமிகளை |
| மரம் | பல் | |

வேம்பு மருத்துவப் பண்பு கொண்ட ஒரு ____________________.

வேப்பம் ____________________ வடகம் செய்து உண்பர்.

வேப்பம் பட்டையில் காய்ச்சப்படும் ____________________ காய்ச்சலுக்கு நல்ல மருந்து. வேப்பிலை காற்றில் உள்ள ____________________ அழிக்கின்றது. வேப்பங்குச்சியினால் ____________________ துலக்குவர்.

(புள்ளிகள் 10)

6) கீழேயுள்ள பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழீழத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த இடங்களில் ஒன்று திருகோணமலை. இதனைத் திருமலை என்றும் அழைப்பர். இங்கு இயற்கைத் துறைமுகம் உள்ளது. சுற்றுலாச் செலவரைக் கவரும் வெந்நீர் ஊற்றுக்கள் இங்கு காணப்படுகின்றன. திருமலைக் கடலில் மகாவலி ஆறு வந்து கலக்கின்றது. இது நெல்விளையும் வயல்களைக் கொண்ட பட்டினமாகும். திருகோணமலை தமிழரின் தாய் நிலமாகும்.

1. திருகோணமலையில் வந்து கலக்கும் ஆறு எது?

______________________________

______________________________

2. திருமலை என்று அழைக்கப்படுவது எது?

______________________________

______________________________

3. சுற்றுலாச் செலவரைக் கவருவன எவை?

______________________________

______________________________

4. திருகோணமலை எங்குள்ளது?

______________________________

______________________________

5. திருகோணமலை யாருடைய தாய்நிலம்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. காட்டில் செருக்குடன் வாழ்ந்த விலங்கு எது?

_______________________________________________

_______________________________________________

2. ஆலமரத்தின் பயன்களில் ஒன்று தருக?

_______________________________________________

_______________________________________________

3. ஆடிப்பிறப்பன்று வீட்டில் செய்யப்படும் பண்ணியங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

4. இலக்கண நூலில் முதன்மையான நூல் எது?

_______________________________________________

_______________________________________________

5. கண்ணகிக்குச் சிலை எடுத்த மன்னன் யார்?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிட மொழியில் எழுதுக.

1. ஊஞ்சல் - ______________________________

2. பனிகாலம் - ______________________________


3. மருந்து - ______________________________

4. மிதியுந்து - ______________________________

5. யானை - ______________________________

(புள்ளிகள் 05)

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



(புள்ளிகள் 15)